# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8075899

C

1. District : Erode
மாவட்டம்
PS: Vigilance and Anti-Corruption, Erode
காவல்நிலையம்
Year: 2022
ஆண்டு
FIR No.: 02/AC/2022
மு.த.அ. எண்
Date: 13.10.2022
நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018.
Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 22.9.2022 After Noon
நாள் முதல்
and Date to : 10.10.2022 at 1300 hrs
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from : —
நேரம் முதல்
Time to : —
நேரம் வரை
(b) Information Received at PS. Date : 12.10.2022
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 1700 hrs
நேரம்
(c) General Diary Reference : Entry No(s) V01 - III
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 12.10.2022 / 1700 hrs
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed (Tamil)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Office of Village Administrative office, Vemandampalayam 'B' village,
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : Kottakattupalayam, Nambiyur Taluk, Erode Dist.
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : —
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. Karthikeyan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Palanisamy (late)
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 34 Year 14.05.1988
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : —
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Farmer
தொழில்
(g) Address : 10/34, Thulukan Thottam, Vemandampalayam 'B' village, Paitrampalayam-Post, Nambiyur Taluk, Erode Dist.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Arun Prasad, Village Administrative officer, Vemandampalayam - 'B' village, Kottakattupalayam, Nambiyur Taluk, Erode Dist.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No delay

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted.

Separate Sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ G. Arumugam Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / ~~transferred to PS~~ V and AC, Erode on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் ரேகைப் பதிவு P. Karthik 13.10.2022

Signature of the Officer in-charge, Police Station [signature] 13/10/2022
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13.10.2022

Name பெயர் G. Arumugam,
Rank நிலை Inspector of Police No. எண்
Vigilance and Anti-Corruption
Erode.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 2/AC/2022 u/s 7(a) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் G.ஆறுமுகம் ஆகிய நான் 12.10.2022 தேதி மாலை 17.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது திரு.P.கார்த்திகேயன் வயது-34, த/பெ. பழனிச்சாமி (லேட்), க.எண்.10/34 துளுக்கந்தோட்டம், வேமாண்டம்பாளையம் ஆ கிராமம், போத்தம்பாளையம் அஞ்சல், நம்பியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கணிணியல் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்துபூர்வமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் P.கார்த்திகேயன் வயது-34, த/பெ. பழனிச்சாமி (லேட்), க.எண்.10/34 துளுக்கந்தோட்டம், வேளமாண்டம்பாளையம் ஆ கிராமம், போத்தம்பாளையம் அஞ்சல், நம்பியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் பெறுதல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகம், கருங்கல்பாளையம், ஈரோடு ஐயா, நான் ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டம், போத்தம்பாளையம் அஞ்சல், வேமாண்டம்பாளையம் ஆ கிராமம், துளுக்கந்தோட்டம், க.எண். 10/34-ல் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எங்களுக்கு சொந்தமான சுமார் 4 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். என் தாத்தா திரு.கருப்பகவுண்டர் அவர்கள் 1980 ஆண்டு வேமாண்டம்பாளையத்தில் சர்வே எண்.153/1ல் சுமார் 75 சென்ட் விவசாய பூமியை நஞ்சியமுதலியார் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கி நம்பியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண்.375/1980-ன்படி கிரையம் செய்து விவசாயம் செய்து வந்தார். என் தாத்தாவிற்கு இரண்டு மகள்கள் மற்றும் ஒரு மகன் ஆவார். அதாவது சின்னம்மாள், மாராத்தாள் மற்றும் எனது தந்தை பழனிச்சாமி ஆகும். என் தாத்தா கடந்த 12.12.2001 ஆம் தேதியன்று இறந்துவிட்டார். என் பாட்டியும் அதன்பிறகு இறந்துவிட்டார். எனது தந்தை திரு.பழனிச்சாமி அவர்கள் கடந்த 17.08.2016 ஆம் தேதியன்று இறந்து விட்டார். அந்த சமயத்தில் எனது அத்தைகள் சின்னம்மாள் மற்றும் மாராத்தாள் ஆகிய இரண்டுபேரும், என் அம்மா கருணையம்மாள் மற்றும் நானும் என் தாத்தாவின் வாரிசுகள் ஆவார். மேற்படி எங்களது தாத்தா கருப்பகவுண்டர் வைத்திருந்த 75 சென்ட் நிலத்தினை எங்கள் அனுபோகத்தில் தான் இருந்து வருகிறது. மேற்படி சொத்தை பாகபிரிவினை செய்யலாம் என்று நாங்கள் முடிவு செய்தோம். அதுபற்றி விசாரித்ததில் முதலில் பட்டா மாறுதல் செய்து கூட்டுப்பட்டாவில் எங்கள் பெயர்களை சேர்க்கவேண்டும் என்று தெரியவந்தது. எனவே நானும், எனது சொந்தக்காரர் ஒன்று விட்ட தம்பி மகேஷ்குமார் அவர்களும் இதுசம்மந்தமாக எங்களது வேமாண்டம்பாளையம் ஆ கிராமம் மணியகாரர் அருண்பிரசாத் அவர்களை சந்தித்து விபரம் கேட்கலாம் என்று முடிவு செய்து, நானும் அவரும் கடந்த 22.09.2022 ஆம் தேதி மதியம் வேமாண்டம்பாளையம் ஆ கிராமம் மணியகாரர் அருண்பிரசாத் அவர்களை கொட்டக்காட்டுப்பாளையத்தில் அமைந்துள்ள மணியகாரர் அலுவலகத்தில் சந்தித்து

மேற்படி விபரங்களை கூறி எங்களுக்கு சொந்தமான தற்போது எங்க தாத்தாவின் பெயரில் உள்ள 75 செண்ட் நிலத்திற்கு மேற்படி வாரிசுதார்களான சின்னம்மாள், மாராத்தாள், என் அம்மா கருணையம்மாள் மற்றும் கார்த்திகேயன் ஆகிய என்னையும் கூட்டுப்பட்டாவில் சேர்ப்பதற்கு விபரம் கேட்டேன். அதற்கு அவர் கொஞ்சம் செலவாகும் என்று கூறி இ.சேவை மையம் மூலமாக பட்டா மாறுதல் விண்ணப்பம் செய்துவிட்டு அதன் நகல் ஒன்று எடுத்துக்கொண்டு அத்துடன் ரூ.10,000/- அவருக்கு தனியாக கொண்டு வந்தால் பட்டா மாறுதல் செய்து கூட்டுப்பட்டாவில் எங்கள் பெயர்களை சேர்க்க ஏற்பாடு செய்கிறேன் என்றார். அதற்கு நானும் சரி என்று சொல்லிவிட்டு என்னுடன் வந்த மகேஷ்குமார் அவருடன் திரும்பி வந்து விட்டேன். எனக்கு சொந்த வேலை இருந்ததால் மணியகாரர் சொன்னபடி நான் ஆன்லைனில் விண்ணப்பிக்கவில்லை அதனால் மணியகாரர் அவர்களை பட்டா மாறுதல் சம்மந்தமாக அப்பொழுது நான் பார்க்கவில்லை. பின்பு மீண்டும் 10.10.2022 ஆம் தேதி மதியம் சுமார் 13.00 மணிக்கு நான் வேமாண்டம்பாளையம் மணியகாரர் அருண்பிரசாத் அவர்களை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து வாரிசுதாரர் சான்றில் இறந்துபோன என் பாட்டியின் பெயர் இல்லை. கூட்டுபட்டா பெறவேண்டி விண்ணபத்தில் அவரையும் சேர்த்துப்போட வேண்டுமா என்று சந்தேகம் கேட்டேன். அவர் அது தேவையில்லை என்றும், இ.சேவை மூலம் விண்ணப்பித்த ஒப்புகை சீட்டும் மற்றும் நான் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.10000/-ம் மட்டும் கொண்டுவாருங்கள் என்று கூறினார். அதற்கு நான் தொகை அதிகமாக உள்ளதால் பணத்தை கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் நீங்கள் கொடுக்கும் பணத்தில் எனக்கு ரூபாய் 2 ஆயிரம் தான் நிற்கும், மீதி பணம் அதிகாரிகளுக்கு கொடுக்கவேண்டும் என்று சொல்லி பணம் ரூ.10000/-ஐ கொடுத்தால் தான் கூட்டுப்பாட்டாவில் பெயர் சேர்க்க ஏற்பாடு செய்யமுடியும் என்று கராராக கூறினார். எனவே நானும், இ.சேவை மூலம் விண்ணப்பம் செய்துவிட்டு வருகிறேன் என்று கூறிவந்து விட்டேன். அதனை தொடர்ந்து 11.10.2022 ஆம் தேதி போத்தாம்பாளையம் இ.சேவை மையம் மூலம் கூட்டுப்பட்டாவில் எங்களது குடும்ப வாரிசுகளின் பெயர்களை சேர்க்க விண்ணப்பம் செய்தேன். அதன் மனு எண்.2022/0103/10/336118 ஆகும். அதனை தொடர்ந்து அன்று இரவு எனது சொந்தக்காரர் திரு.மகேஷ்குமார் என்னை சந்தித்து, அவர் அன்றைய தினம் மாலையில் மணியகாரர் அலுவலகத்தில் வைத்து மணியகாரர் அருண்பிரசாத் அவர்களை சந்தித்ததாகவும், அப்போது மணியகாரர் மகேஷ்குமாரிடம், கார்த்திகேயன் ஆன்லைன் மூலம் கொடுத்த விண்ணப்பம் அவருக்கு கிடைத்து விட்டதாக சொல்லி, தான் ஏற்கனவே கார்த்திகேயனிடம் விண்ணப்பம் ஆன்லைனில் பதிவு செய்தவுடன் பணத்துடன் தன்னை நேரில் பார்க்க சொல்லியிருந்ததாகவும், ஆனால் அவரைக்கானோம் என்று அவரிடம் தகவல் சொல்லி பணத்துடன் நேரில் வந்து பார்க்கச்சொல்லுங்கள் என்று மணியகாரர் சொன்னதாக என்னிடம் தெரிவித்தார். பின்னர், நான் யோசித்து பார்த்ததில் பட்டா மாறுதல் செய்து எங்களது குடும்ப வாரிசுகளின் பெயர்களை கூட்டுப்பட்டாவில் சேர்க்க ஏற்பாடு செய்ய வேமாண்டம்பாளையம் ஆ கிராம மணியகாரர் திரு.அருண்பிரசாத் அவர்கள் லஞ்சமாக

கேட்கும் ரூபாய் 10,000/- கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, மணியகாரர் திரு.அருண்பிரசாத் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். மேற்படி லஞ்ச பணம் 10 ஆயிரத்தை கொண்டு வந்துள்ளேன் என்பதையும் இதன்மூலம் தெரிவிக்கிறேன் இப்படிக்கு, கையொப்பம் XXXX (P.கார்த்திகேயன்) நாள்: 12.10.2022

Sir, Received the above said computer tamil typed complaint on 12.10.2022 at 17.00 hrs. Sd/- (xxxxxxxx) 12.10.2022 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Sir, A confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, today 13.10.2022 at 07.00 hrs, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.02/AC/2022 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 against the accused Tr.Arunprasadh Sd/- (xxxxxxxx) 13.10.2022 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.P.Karthikeyan age 34, s/o late Palanisamy, D.No.10/34 Thulukkanthottam, Vemandampalayam B village, Poothampalayam post, Nambiyur taluk, Erode District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

13/10/2022

(G.Arumugam)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.